**கொரோனா வைரஸ் பற்றிய கேள்வி பதில்**

## (மூலம்: உலக சுகாதார ஸ்தாபனம்)

- **கொரோனா வைரஸ் என்றால் என்ன?**

கொரோனா வைரஸ் விலங்குகள் மற்றும் மனிதர்கள் மத்தியில் காணப்படுகின்ற ஒரு வைரஸ் இனமாகும். இவற்றில் சில வைரஸ்கள் மனிதர்களுக்கு தொற்றுக்களை ஏற்படுத்துவதுடன் அந்தத் தொற்றுக்கள் சாதாரண சளி முதல் MERS மற்றும் SARI போன்ற சுவாச நோய் நிலைகளையும் ஏற்படுத்தும்

- **“புதிய” கொரோனா வைரஸ் என்றால் என்ன?**

“புதிய” கொரோனா வைரஸ் என்பது மனிதர்கள் மத்தியில் இதற்கு முன்னர் இனங்காணப்படாத ஒரு வைரஸ் வகையாகும். 2019 டிசம்பர் மாதம் சீனாவின வுஹான பிரதேசத்தில் முதன் முறையாக இனங்காணப்பட்ட இந்த வைரஸ் 2019nCoV என அழைக்கப்படுகின்றது.

- **இந்த வைரஸ் சார்ஸ் (SARS-CoV) வைர |**

இல்லை. புதிய கொரோனா வைரஸ் (2019-nCoV) மற்றும் சார்ஸ் வைரஸ் என்பன ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையாக உள்ள போதிலும் அவை ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவையாகும்.

- **இது ஒரு அபாயகரமான வைரஸா?**

ஏனைய சுவாச நோய்களைப் போன்று, புதிய கொரோனோ வைரஸ் தொற்றுவதினால் சளி, தொண்டை நோவு, இருமல், காய்ச்சல் என்பன போன்ற சிறிய அறிகுறிகள் ஏற்படுகின்றன. சிலருக்கு நியூமோனியா அல்லது சுவாசக் கோளாறுகள் போன்ற நோய் நிலைமைகள் ஏற்பட முடியும். மிகவும் அரிதாக இந்த நோய் மரணம் விளைவிக்கும். முதியவர்கள் மற்றும் ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் (நீரிழிவு மற்றும் இருதய நோய்) இந்த வைரஸ் தொற்றுவதினால் கடுமையாக நோய்வாய்ப்படும் அபாயம் காணப்படுகின்றது.

- **வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளால் இந்த வைரஸ் தொற்ற முடியுமா?**

இல்லை. இதுவரையில் பூனைகள், நாய்கள் போன்ற செல்லப் பிராணிகளைத் தொற்றியுள்ளதாக அல்லது அப்பிராணிகள் மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றியதாக எந்தவொரு சாட்சியும் இல்லை.

- **புதிய கொரோனா வைரஸ் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவ முடியுமா?**

  ஆம். வைரஸ் தொற்றியுள்ள ஒருவருடன் நெருக்கமாகப் பழகிவதனால் இந்த புதிய கொரோனா வைரஸ் ஏனையோருக்கு பரவ முடியும். உதாரணமாக வீட்டினுள், அலுவலகத்தில் அல்லது வைத்தியசாலையில் வைரஸ் தொற்றியுள்ள ஆட்களுடன் நெருங்கிப் பழகுவதனால்.

  இந்த வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எவ்வாறு?

  நோயைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். இது தொடர்பாக சமகாலத் தகவல்களைப் பெறுவதற்கு தொற்று நோயியல் பிரிவின் (இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.)

  இந்த வைரஸிலிரிந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பின்வரும் செயற்பாடுகளைப் பின்பற்றுங்கள்.

  - உங்கள் இரு கரங்களையும் சவர்க்காரமிட்டு அல்லது மதுசாரம் அடங்கிய கைகழுவம் திரவத்தினால் கழுவுங்கள்.

  ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

  சவர்க்காரமிட்டு அல்லது மதுசாரம் அடங்கிய கைகழுவும் திரவத்தினால் கைகளைக் கழுவும் போது கைகளிலுள்ள வைரஸ்கள் அழிந்து விடுகின்றன.

  - இருமல், தும்மல் அல்லது காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் (மூன்று அடிகள்) தூரத்தைப் பேணுதல்.

  ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

  இந்த வைரஸ் தொற்றியவர்கள் இருமும் போது அல்லது தும்மும் போது வைரஸ் அடங்கிய துளிகள் வெளிவருகின்றன. நீங்கள் அந்த ஆளுக்கு நெருக்கமாக இருப்பீர்களாயின், நீங்கள் சுவாசிக்கும் போது இந்த வைரஸ் உங்கள் உடலில் நுழைய முடியும்.

  - உங்கள் கண்கள், மூக்கு, வாய் என்பவற்றத் தொடுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்.

    ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

    உங்கள் இரு கைகளும் வைரஸ் மூலம் மாசடைந்த மேற்பரப்பொன்றை தொட்டிருக்கும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு மாசடைந்துள்ள கைகளினால் உங்கள் கண்களை, மூக்கை, வாயை தொடும் போது, அந்த மேற்பரப்புக்களிலிருந்து வைரஸ்கள உங்கள் உடலுக்குள் கடத்தப்படலாம்.

- உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவ ாசக் கோளாறுகள் இருப்பின் உடனடியாக சிகிச்சை பெறுங்கள். புதிய கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட சீனாவிற்குப் பிரயாணம் செய்திருந்தால் அல்லது சீனாவுக்குச் சென்று வந்த சுவாச நோய்க் கோளாறு உள்ளவர்களுடன் நெருங்கிப் பழகியிருந்தால், உங்கள் வைத்தியருக்கு அதனை அறிவியுங ்கள்.

  ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

  உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவாசக் கோளாறுகள் இருப்பின் உடனடியாக சிகிச்சை பெறுவது முக்கியமானதாகும். இது வைரஸ் தொற்றாக அல்லது வேறு ஒரு அபாயகரமான நோய் நிலைமையினால் ஏற்பட்டிருக்க முடியும்.

  காய்ச்சலுடன் ஏற்படும் சுவாச நோய் அறிகுறிகள் பல்வேறு காரணங்களினால் ஏற்பட முடியும். நீங்கள் புதிய கொரோனா வைரஸ் தொற்றுக் காணப்படுகின்ற பிரதேசங்களில் பிரயாணம் செய்திருந்தால் அல்லது அப்பிரதேசங்களில் பிரயாணம் செய்த பின்னர் சுவாச நோய் அறிகுறிகள் ஏற்பட்டுள்ள ஆட்களுடன் நெருக்கமாகப் பழகியிருந்தால் உங்கள் நோய் அறிகுறிகளுக்கான காரணமாக அந்த வைரஸ் தொற்றாக இருக்க முடியும்.

- உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் இருந்து, சீனாவிற்கு பிரயாணம் செய்திருக்காவிட்டால், துப்புரவு நடைமுறைகளை நன்றாகப் பின்பற்றுங்கள். குணமடையும் வரையில் வீட்டில் தங்கியிருப்பது மிகவும் சிறந்ததாகும்.

## ➢ இந்த வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு வாய்க் கவசம் அணிய வேண்டுமா?

வாய்க் கவசம் அணிவதனால் சில தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியும். எனினும் முகக் கவசத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரம் வைரஸ் தொற்றுவதைத் தடுக்க முடியாது. வாய்க் கவசம் அணிவது உள்ளிட்ட ஏனைய நோய் நிவாரண முறைகளையும் (துப்புரவு நடைமுறைகள் மற்றும் தொற்றுக்குள்ளான நோயாளிகளுடன் பழகுவதைத் தவிர்த்தல் - ஆகக் குறைந்தது ஒரு மீற்றர்/ மூன்று அடி இடைவெளியைப் பேணுதல்) சேர்த்துப் பின்பற்றுவதன் மூலம் வைரஸ் தொற்றுவதைக் குறைக்க முடியும்.

உங்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் (இருமல் அல்லது தும்மல்) இருப்பின் அல்லது புதிய கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதாக சந்தேகிப்பதாயின் அல்லது புதிய கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் ஆளோருவரைப்

பராமரிப்பதாயின் மாத்திரமே நீங்கள் வாய்க் கவசமொன்றை அணிய வேண்டும்.

சீனாவில் இந்த வைரஸ் பரவியுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிரதேசமொன்றில் பிரயாணம் செய்துள்ள அல்லது சீனாவில் பிரயாணம் செய்ததன் பின்னர் சுவாச நோய் அறிகுறிகள் ஏற்பட்டுள்ளவர்களுடன் நெருங்கிப் பழகிய ஆட்களே புதிய கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதாக சந்தேகிக்கப்படுகின்றனர்.

➢ **சரியான முறையில் வாய்க் கவசம் அணிதலும் அவற்றை அகற்றுதலும்**

- வாய்க் கவசம் அணியும் போது சவர்க்காரமிட்டு அல்லது மதுசாரம் அடங்கிய கைகழுவும் திரவத்தினால் இரு கைகளையும் கழுவுங்கள்.
- முகமும் மூக்கும் மறையும் விதத்தில் வாய்க் கவசத்தை அணியுங்கள். இங்கு உங்கள் முகத்திற்கும் வாய்க் கவசத்திற்கும் இடையில் இடைவெளி இருக்கக் கூடாது.
- வாய்க் கவசத்தை அணிந்திருக்கும் போது தொடுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் வாய்க் கவசத்தை தொடுவீர்களாயின், சவர்க்காரமிட்டு அல்லது மதுசாரம் அடங்கிய கைகழுவும் திரவமொன்றினால் கைகளைக் கழுவுங்கள்.
- ஒரு முறை மாத்திரம் பயன்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படும் வாய்க் கவசங்களை மீண்டும் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள்.
- வாய்க் கவசத்தை அகற்றும் போது தலையின் பின்னால் உள்ள பகுதியினால் (கட்டும் இலாஸ்டிக்) பிடித்து அகற்றுங்கள் (வாய்க் கவசத்தின் முன்பகுதியைத் தொட வேண்டாம்) மூடியொன்றைக் கொண்ட தொட்டியொன்றில் உடனடியாகப் போடுங்கள், சவர்க்காரம் அல்லது மதுசாரணம் அடங்கிய கைகழுவும் திரவமொன்றினால் கைகளைக் கழுவுங்கள்.

➢ **இந்த வைரஸ் யாரத் தொற்ற முடியும்?**

வைரஸ் பரவி வரும் பிரதேசமொன்றில் வாழும் அல்லது அத்தகைய பிரதேசமொன்றில் பிரயாணம் செய்யும் ஆட்களை இந்த வைரஸ் தொற்ற முடியும். தற்போது அதிகமான வைரஸ் தொற்றியவர்கள் இந்த வைரஸ் பரவி வரும் நாடான சீனாவில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட நோய் தொற்றியவர்கள் அண்மையில் சீனாவில் பிரயாணம் செய்தவர்களாக அல்லது அவ்வாறு பிரயாணம் செய்தவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களாக உள்ளனர். புதிய கொரோனா வைரஸ் தொற்றியுள்ள ஆட்களைப் பராமரிக்கும் சுகாதார ஊழியர்களை

இந்த வைரஸ் தொற்றுவதற்கான அபாயம் அதிகளவில் உள்ளது. அவர்கள் இந்த வைரஸ் தொற்றுவதைத் தடுப்பதற்கு பொருத்தமான செயற்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

- **கடுமையான நோய் நிலைமைக்கு உட்படும் அபாயம் யாருக்குள்ளது?**

புதிய கொரோனா வைரஸ் குறித்து தொடர்ந்தும் ஆய்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதோடு, இதுவரை நோய் தொற்றியுள்ள நபர்கள் மற்றும் ஏனைய நோய்களினால் பாதிப்புற்ற நபர்களுக்கு ( நீரிழிவு மற்றும் இருதய நோய் போன்றன ) கடுமையாக நோய்வாய்ப்பட்டவர்களுக்கு அபாயம் காணப்படுகின்றது.

- **இந்த வைரஸ் எப்படி பரவுகின்றது?**

புதிய கொரோனா வைரஸ் சுவாசத் தொகுதியுடன் தொடர்புடைய ஒரு வைரஸாகும். ஆரம்பமாக நோய் தொற்றுக்குள்ளான நபர் ஒருவர் இருமுதல், தும்முதல் மூலம் வெளியாகும் துளிகள் அல்லது உமில்நீர்த் துளிகள் அல்லது மூக்கிலிருந்து வெளியாகும் திரவம் மூலம் வைரஸ் மற்றொருவருக்கு பரவ முடியும். அதனால், அந்நபர் உரிய சுகாதார முறைகளைப் பின்பற்றுவது முக்கியமானதாகும். (உதாரணமாக, இருமல் அல்லது தும்மலின் போது முழங்கையினால் அல்லது திசு கடதாசியினால் உமது வாயையும் மூக்கையும் மூடிக் கொள்ளுங்கள். அத்திசு கடதாசியை உடனாடியாக மூடியுடன் கூடிய குப்பை வாளியினுள் இடவும்.) அவ்வாறே சவர்க்காரம் இட்டு அல்லது மது அடங்கிய கை கழுவும் திரவத்தினால் அடிக்கடி கழுவிக் கொள்ளவும்.

- **வெளி மேற்பரப்பின் மீது இவ்வைவரஸ் எவ்வளவு காலம் அழியாமல் இருக்கின்றது?**

கொரோனா வைரஸ் எவ்வளவு காலம் வெளி மேற்பரப்புக்களில் அழியாமல் காணப்படும் என்பதை இன்னும் உறுதியாக இனங்காணப்படவில்லை என்பதோடு தற்போது காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப ஒரு சில மணித்தியாளங்கள் அவ்வாறே அழியாமல் இருக்கும். எளிய கிருமி நாசினியைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த வைரஸை அழிக்க முடியும்

என்பதோடு மேலும் மக்களைத் தொற்றுவதிலிருந்து தடுத்துக் கொள்ள முடியும்.

- **கொரோனா வைரஸ் தொற்று ஏனைய சுவாசத் தொற்றுக்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?**

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நபருக்கு காய்ச்சல், இருமல் மற்றும் மூக்கிலிருந்து நீர் வடிதல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றது. இவ்வாறான நோய் அறிகுறிகள் வேறு வைரஸ்களின் மூலம் ஏற்படும் சுவாச தொற்றுக்களையும் கண்டு கொள்ளலாம். நோய் அறிகுறிகளில் உள்ள ஒற்றுமை காரணமாக, நோய் அறிகுறிகளின் அடிப்படையின் மாத்திரம் நோயை அடையாளங் கண்டு கொள்வது கடுமையான விடயமாகும். அதனால் எவரேனும் ஒருவருக்கு புதிய கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதா என்பது பற்றி உறுதிசெய்வதற்கு ஆய்வுகூட பரிசோதனைகள் அவசியப்படுகின்றன. இருமல், காய்ச்சல் மற்றும் சுவாசித்தலில் அசௌகரியங்கள் உள்ள நபர்கள் தாமதமின்றி வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

- **வைரஸ் உடலில் தொற்றியதன் பின்னர் நோய் அறிகுறிகள் வெளிப்படுதவதற்கு எடுக்கும் காலம் ( நோயரும்பு காலம்) எவ்வளவு?**

தற்போது காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப இக்காலம் 14 நாட்கள் வரையாக இருக்க முடியும். உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைப்பது தொற்றுக்குள்ளானதாக உறுதிப்படுத்தப்படும் நோயாளர்களுடன் பழகிய நபர்களை 14 நாட்கள் வரை கண்காணித்தல் வேண்டும் என்பதாகும்.

- **புதிய கொரோனா வைரஸ் எவ்வித நோய் அறிகுறிகளும் அற்ற நபரொருவருக்கு பரவ முடியுமா?**

கவனத்திற் கொள்ளத்தக்க நோய் அறிகுறிகள் தென்படுவதற்கு முன்னர் புதிய கொரோனா வைரஸ் தொற்றியுள்ள நபரொருவரிடமிருந்து மற்றொரு நபருக்கு நோய் பரவுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. எவ்வாறாயினும், தற்போது நிலவும் தகவல்களுக்கு எற்ப நோய் பிரதானமாக பரவுவது நோய் அறிகுறிகள் உள்ள நபரிடமிருந்தாகும்.

- **சீனாவில் அல்லது வைரஸ் தொற்றியுள்ள இடமொன்றிலிருந்து பொதியொன்று கிடைக்கப்பெறுவது பாதுகாப்பனதா?**

ஆம், அது பாதுகாப்பனதாகும். பொதி கிடைக்கப்பெறும் நபர் புதிய கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்பு காணப்படுவதில்லை. வேறு கொரோனா வைரஸ்கள் தொடர்பாக உள்ள அறிவுக்கமைய, இவ்வாறான வைரஸ் அடங்கிய கடிதம் அல்லது பொதிகளில் நீண்ட காலம் உயிர் வாழ்வதற்கான வாய்ப்பு காணப்படுவதில்லை.

- **புதிய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தடுப்பதற்கு மற்றும் சிகிச்சையளிப்பதற்கு நோயெதிர்ப்பு மருத்துகளைப் பயன்படுத்த முடியுமா?**

நோயொதிர்ப்பு மருந்துகள் மூலம் பற்றீரியாக்களால் தொற்றுக்குள்ளான நோய்களை மாத்திரமே குணப்படுத்த முடியும். அதனால் புதிய கொரோனா வைரஸ் போன்ற வைரஸ்கள் தொற்றுவதனை குணப்படுத்த முடியாதுள்ளது.

- **புதிய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அல்லது அதற்கு சிகிச்சையளிப்பதற்கு குறித்த ஏதேனும் மருந்துகள் காணப்படுகின்றதா?**

இதுவரை, கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தடுப்பதற்கு அல்லது சிகிச்சையளிப்பதற்கென்று குறித்த மருந்துகள் இதுதான் என பரிந்துரைக்கப்படவில்லை. எவ்வாறாயினும், புதிய கொரோனா வைரஸ் தொற்றியவர்களின் நோய் அறிகுறிகளை தணிப்பதற்கு உசிதமான சிகிச்சைகள் வழங்கப்படல் வேண்டும் என்பதோடு மிகவும் கடுமையாக நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டவர்களை ஆதரவுக் கண்காணிப்பினை ( Supportive Care) வழங்குதல் வேண்டும்.

புதிய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு, நீர் கை மற்றும் சுவாச சுகாதார முறைகளை பின்பற்றுதல் வேண்டும் என்பதோடு, முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இருமல் மற்றும் தும்மல் போன்ற சுவாச நோய் அறிகுறிகளை வெளிக்காட்டும் எந்தவொரு நபருடனும் கிட்டிய தொடர்புகளை வைத்துக்கொள்வதில் இருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்.

விடமின் C மாத்திரைகளை எடுத்தல், முக மூடிகளை அணிதல் மற்றும் நோயெதிர்ப்பு மருந்துகளை வைத்திய பரிந்துரையின்றி பயன்படுத்துவது புதிய கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பரிந்துரைக்கப்பட மாட்டாது. இவ் வழிமுறைகள் உம்மை வைரஸிலிருந்து பாதுகாக்காது என்பதுடன் உமக்கு பாதிப்பினையும் ஏற்படுத்த முடியும்.

எவ்வாறாயினும், உமக்கு காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சு விடுவதில் அசௌகரியங்கள் ஏற்படுமாயின் மிகவும் கடுமையான தொற்று ஏற்படும் ஆபத்தினைக் குறைத்துக் கொள்வதற்காக முன்னமே வைத்தியரை நாடவும். அண்மைக் காலத்தில் நீர் சுற்றுலா மேற்கொண்ட பிரதேசங்கள் தொடர்பிலும் வைத்தியருக்கு அறிவிக்கவும்.

**மேலதிகமான வினாக்கள் மற்றும் பதில்கள்**

- **புதிய கொரோன வைரஸ், தொற்றுக்குள்ளான நபரொருவரினால் மேலும் எத்தனை பேருக்கு பரவ முடியுமாக உள்ளது?**

இவ்வாறு நோய் பரவக்கூடிய நபர்களின் எண்ணிக்கை RO ("R naught") என்ற குறிகாட்டியின் மூலம் முன்வைக்க முடியும். அதனால் தொற்றுக்குள்ளான காலப்பகுதியினுள் பொதுவாக ஒரு நோயாளியிடமிருந்து, நோய் தொற்றுக்குள்ளாக முடியுமான, முன்னர் தொற்றுக்குள்ளாகாத நபர்கள் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளானவர்கள் சிலர் RO பெறுமானங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

MERS- CoV <1 இபோலா – 1.5-2

SARS -4 HIV – 4

சின்னம்மை – 12 -18

புதிய கொரோனா வைரஸிற்கான மதிப்பிடப்பட்ட இந் பெறுமானம், 2020.01.30 ஆந் திகதியாகும் போது 1.4 – 2.5 ஆகும். ( புதிய தரவுகள் கிடைக்கப்பெற்றவுடன் இப்பெறுமானங்கள் மாற்றமுற வாய்ப்புண்டு).

- **இந் நோய் எவ்வளவு அபாயகரமானது?**

அபாயகரமானது என்பதை அளவிடுவது இறப்புச் சதவீம் (Case Fatality Rate) என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்படும் குறிகாட்டியின் மூலமாகும். அதன் சதவீதமாக முன்வைக்கப்படுகின்றது. தொற்றுக்குள்ளான 100 பேரில் எத்தனை பேர் மரணிக்கின்றார்கள் என்பது அதனால் கருதப்படுகின்றது. 2002-2003 ஆம் ஆண்டுகளில் SARS தொற்றுநோயின் போது இப் பெறுமானம் 9.6% உம், 2012 இல் MERS கொரோனா தொற்றுநோயின் போது 34.4% ஆகும். புதிய கொரோனா தொற்றுக்காக 2% இனரே கணக்கிடப்பட்டுள்ளார்கள்.

- **புதிய கொரோனா வைரஸ் தொற்றுக்கான நாடொன்றிலிருந்து நான் இலங்கைக்கு 14 நாட்களுக்குள் வந்தேன். நான் என்ன செய்ய வேண்டும்?**

தயவு செய்து இவ்விணையத்தளத்தின் “அதிகூடிய ஆபத்துள்ள நாடொன்றிலிருந்து மீள வருகை தந்தவர்களுக்கான அறிவுரைகள்” ( Advices for high risk country returnee) இற்கு பிரவேசிக்கவும்.

- **நான் அதிகூடிய ஆபத்துள்ள நாடொன்றிலிருந்து இலங்கைக்கு வருகை தந்து 14 நாட்கள் கடந்துள்ள நிலையில் நான் செய்ய வேண்டியது யாது?**

உமக்கு நோய் அறிகுறிகள் காணப்படாது விடின், நீர் விசேடமாக எதையும் செய்ய வேண்டியதில்லை. 14 நாட்கள் கடந்த பின்னர் முன்னர் குறிப்பிடப்பட்ட நோய் அறிகுறிகள் ஏற்படுமாயின், அது புதிய கொரோனா வைரஸினால் ஏற்பட்டதாக கருதப்பட முடியாது. என்றாலும் 14 நாட்களினுள் நோய் அறிகுறிகள் ஏற்படுமாயின், தயவு செய்து “அதிகூடிய ஆபத்துள்ள நாடொன்றிலிருந்து வருகை தந்தவர்களுக்கான அறிவுரைகள்” (Advices for high risk country returnee) இற்கு பிரவேசிக்கவும்.

- **புதிய கொரோனா வைரஸிற்கான தடுப்பூசிகள் ஏதும் காணப்படுகின்றதா?**

இன்றுவரை, புதிய கொரோனா வைரஸிற்காக தடுப்பூசிகள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

- **பாடசாலை மாணவர்களுக்கு வழங்க முடியுமான அறிவுரைகள் எவை?**

  தயவு செய்து இவ்விணையத்தளத்தினுள் காணப்படும் “பாடசாலை மாணவர்களுக்கான தகவல் கையேடு” ( Information leaflet to School Children) இனுள் பிரவேசிக்கவும்.

**தொற்று நோயியல் பிரிவு**

**சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவை அமைச்சு**

**12.02.2020**